
# தூதன்

தூதன்-28 | பிப்ரவரி 2019 | தூது-2

அவர் போதகம்பண்ணி முடித்தபின்பு சீமோனை நோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். லூக்கா 5:4




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 04 |
| ஆராதனை பாடல்கள் | 05 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 06 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 08 |
| உதவி ஆயரம்மா மடல் | 10 |
| செயலர் மடல் | 12 |
| Junior Church Annual Report | 14 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| உபவாசம் இயேசு விசுவாசம் | 18 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 19 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| விலையேறப்பெற்ற முத்து | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| தெரிந்துகொள்வோம் | 26 |
| Health Tips | 28 |
| Children’s Corner | 30 |
| Birthday Celebrants | 33 |
| Wedding Anniversary | 36 |
| A day in the Holy Temple - Part 2 | 37 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com,  E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான இறைமக்களே,

இறைமைந்தனார் இயேசுகிறிஸ்துவின் இணையற்ற திருப்பெயரில் என் அன்பின் வாழ்த்துக்கள். முதலாம் மாதத்தை நிறைவுபெறச்செய்து, இரண்டாம் மாதத்தில் கரம்பிடித்து நடத்தும் நம் அருள்நாதர் இயேசுகிறிஸ்துவுக்கு நமது நன்றி பலிகளைச் செலுத்துவோம்.

இம்மாதத்திற்கான தியானப்பகுதி - லூக்கா 5:27-32

எனக்குப் பின்சென்று வா - Follow Me.

ஆண்டவர் இயேசு இப்பூமியில் இறைபணியாற்றிய காலங்களில், அவருடன் இணைந்து பணியாற்றவும், அவருக்குப் பின்னர் இறையரசின் தொடர் பணியாற்றவும், பனிரெண்டு பேர் கொண்ட சீடர் கூட்டத்தைத் தெரிவு செய்தார். அதில் ஒரு முக்கியமான தெரிவு மத்தேயு ஆவார். இயேசுவின் சீடர்களில் பெரும்பான்மையானோர் மீனவ சமூகத்தைச் சார்ந்தவர்கள். இவர் மாத்திரமே அரசுப்பணியாளர். அதிலும் பணவருவாய் மிகுந்த ஆயத்துறையில் பணிபுரிந்தவர். இவரது அழைப்பும், ஊழிய இணைப்பும் அநேகருக்கு ஆச்சரியமாய் இருக்கக்கூடும்.

ஏனெனில் இயேசுவின் திருப்பணிக்காலங்களில் ஆயக்காரர்கள் யூத மக்களால் மிகவும் வெறுக்கப்பட்ட மக்கள். ஏனெனில் அவர்கள் ரோமர்களின் முகவர்களாய் இருந்து, லாப நோக்கில் செயல்பட்டு வந்தவர்கள். அப்படிப்பட்ட பிண்ணனியில் இருந்து மத்தேயு இயேசுவின் சீடராக அழைப்பை அவர் பணிசெய்யும் இடத்திலேயே பெற்றுக் கொள்கிறார். இந்த அழைப்பின் நிகழ்விலிருந்து சில சிந்தனைகளைக் கற்றுக்கொள்வோம்.

### 1. ஆண்டவரின் தேடல் - The Search of the Lord:

ஆண்டவரின் இறைபணியை அவரோடு இணைந்தும், அவருக்குப்பின்னரும் தொடர் பணியாற்றிட தகுதியுடைய மனிதரை ஆண்டவர் இயேசு தேடுகிறார். பணி செய்யும் இடம் தேடி வருகிறார். அது அரசு அலுவலகமோ அல்லது கலிலேயாக் கடற்கரையோ, ஆண்டவருக்கு அவர்கள் தேவை. தேடிவருகிறார்.

**2. ஆண்டவரின் அழைப்பு - The Call of the Lord:**
தேடிவரும் ஆண்டவர், மத்தேயு பணியாற்றும் ஆயத்துறைக்கே சென்று, நீ இருக்கின்ற இடத்தினின்று என்னுடன் பயணிக்க வா என்று அன்புடன் கட்டளையிடுகிறார்.

**3. மத்தேயுவின் ஏற்பு - Matthew's Acceptance:**
ஆண்டவர் இயேசுவின் உன்னத அழைப்பைப் பெற்றமாத்திரத்தில் அதனை மத்தேயு ஏற்றுக்கொள்கிறார்.

**4. மத்தேயுவின் உடனடியான பதில் செயல் - Matthew's immediate response:** லூக்கா 5:28-ல் இப்படி வாசிக்கிறோம். மத்தேயு எல்லாவற்றையும் விட்டு, எழுந்து, இயேசுவுக்குப் பின்சென்றான். இயேசுவின் அழைப்பிற்கு முன் மத்தேயுவின் ஆயத்துறை பொறுப்போ, பணமோ, பதவியோ, செல்வாக்கோ, அவருக்கு முதன்மையானதாய் தோன்றவில்லை. எனவேதான் அவர் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவுக்குப் பின்சென்றார்.

**5. மத்தேயுவின் தொடர் செயல் - The Follow up of Matthew:**
பிற சீடர்களைப்போல மத்தேயு உடனடியாக இயேசுவைப் பின்தொடராமல், தன் வீட்டிலே தன்னைப்போன்ற வெறுக்கப்பட்ட பிற ஆயக்காரர்கள், பாவிகளுடன் இயேசுவுக்கு தன் வீட்டில் பெரிய விருந்தை ஏற்பாடு செய்து, அந்த விருந்தின் வழியாக, மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இறைபணியின் நோக்கத்தை யாவரும் அறியும்வண்ணம் செயல்படுகின்றார். பிணியாளிகளுக்குத்தான் வைத்தியன் தேவை, நீதிமான்களையல்ல, பாவிகளையே மனம் திரும்புவதற்கு அழைக்கவந்தேன் என்று தமது செய்தியின் வழியே இயேசுவும் இந்நோக்கத்தை வெளிப்படுத்துகிறார்.

இன்று இயேசு தேடும் மனிதராக நாம் இருக்கிறோமா? அழைப்பைப் பெற்று, உடனே பின்தொடர ஆயத்தமாயுள்ளோமா? சிந்திப்போம், அர்ப்பணிப்போம், செயல்படுவோம்.

ஆண்டவரின் அருளாசி நம் அனைவருடனும் இருப்பதாக.

ஆண்டவரின் அருட்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# ஆயரம்மா மடல்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் சபைமக்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும், தோத்திரங்களையும் சொல்லிக்கொள்ளுகிறேன். இம்மட்டும் நம்மை வழிநடத்தின தேவன் இனியும் நம்மை வழிநடத்த வல்லவராய் இருக்கிறார். இந்தப் புதிய வருடத்தில் கடவுள் நம்மைப் புதிய கிருபைகள், புதிய ஆசீர்வாதங்களால் நம் ஒவ்வொருவரையும் நிரப்பி ஆசீர்வதிப்பாராக.

இந்த ஆண்டின் வாக்குத்தத்தம் "புறப்பட்டுப்போங்கள்" (யாத்.14:15b). எங்கே புறப்படுவது? யாரிடத்தில் போவது? என்று அங்கலாய்ப்போடு ஒருவேளை நாம் இருக்கலாம். ஆனால் கர்த்தரை நம்புகிற நமக்கு ஒரு நன்மையுங் குறைவுபடாது.

"பயப்படாதே" என்று மரியாளுக்குத் தேவதூதன் சொன்னதுபோலவும், மேய்ப்பர்களைப் பார்த்து "பயப்படாதிருங்கள்" என்று சொன்னதுபோலவும், இன்று நம்மைப் பார்த்தும் தேவதூதன் சொல்கிறார் "பயப்படாதிருங்கள்" என்று. எந்த எந்தக் காரியங்களுக்கு நாம் பயப்படுகிறோம் என்று நமக்குத் தெரியும். அவற்றிற்கு நம் தேவன் கொடுக்கும் ஒரே பதில் "பயப்படாதிருங்கள்"

### யார் யார் எல்லாம் பயப்படத்தேவை இல்லை?

2 சாமுவேல் 15:20b கிருபையும் உண்மையும் உன்னோடு இருக்க வேண்டும். எந்தக் காரியங்கள் நாம் செய்தாலும் அதில் ஒரு உண்மை இருக்கவேண்டும் என்று ஆண்டவர் எதிர்பார்க்கிறார். உண்மை என்பது கடவுளோடு நாம் எவ்வளவு தூரம் உண்மையாய் இருக்கிறோம். கடவுள் நமக்குக் கொடுத்த கட்டளை, கற்பனைகளை உண்மையாய் கடைபிடிக்கிறோமா என்று நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

பயத்தைப் போக்கும் நம் இறைவன் மேய்ப்பர்களின் பயத்தைப் போக்கினார். மரியாளின் பயத்தைப் போக்கினார். இன்று நம்முடைய பயத்தையும் போக்க அவர் வல்லவர்.

இந்தப் புதிய வருடத்தில் புதிய தீர்மானங்கள், புதிய முயற்சிகள் எடுத்து இருக்கும் நாம் பயம் இல்லாமல் யாத்திராகமம் 14:15 வசனத்தின்படி கர்த்தர் நம் முன்னே போகிறார். நாமும் அவர் பின்னே புறப்பட்டுப்போவோம். ஆயத்தமாவோம். ஆயத்தப்படுத்துவோம் தேவன்தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
உங்கள் ஆயரம்மா
திருமதி.மேரி உமா விக்டர்.

# ஆராதனை பாடல்கள் - பிப்ரவரி 2019

பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி — கீர்த்தனை 1 - ஆகமங்கள் புகழ்

ஆராதனை இறுதி கவி — பாமாலை 151 - யுத்தம் செய்வோம்

01-02-2019

| | | |
|---|---|---|
| பாமாலை | 42 | மா மாட்சிக் கர்த்தர் |
| பாமாலை | 99 | உங்களைப் படைத்தவர் |
| கீர்த்தனை | 4 | ஆத்துமமே என் முழுஉள்ளமே |
| கீர்த்தனை | 180 | திருமா மறையே |
| பாமாலை | 178 | தீராத தாகத்தால் |

08-02-2019

| | | |
|---|---|---|
| பாமாலை | 1 | அநாதியான கர்த்தரே |
| கீர்த்தனை | 110 | பாவியாகவே வாரேன் |
| பாமாலை | 100 | பாவி கேள் உன் ஆண்டவர் |
| கீர்த்தனை | 131 | இயேசு நேசிக்கிறார் |
| கீர்த்தனை | 119 | கிஞ்சிதமும் நெஞ்சே |

15-02-2019

| | | |
|---|---|---|
| பாமாலை | 6 | உன்னதம் ஆழம் எங்கேயும் |
| பாமாலை | 41 | நேர்த்தியானதனைத்தும் |
| கீர்த்தனை | | அமைதியில் இறைவனைக் காணுவோம் |
| கீர்த்தனை | 95 | நீயுனக்குச் சொந்தமல்லவே |
| கீர்த்தனை | 187 | கர்த்தரின் பந்தியில் வா |

22-02-2019

| | | |
|---|---|---|
| பாமாலை | 4 | ஆத்மமே உன் ஆண்டவரின் |
| பாமாலை | 140 | ஆராய்ந்து பாரும் |
| பாமாலை | 203 | பரிசுத்தம் பெற |
| கீர்த்தனை | 112 | ஏசு கிறிஸ்து நாதர் |
| கீர்த்தனை | 148 | பாதம் ஒன்றே வேண்டும் |
| கீர்த்தனை | 98 | மகனே உன் நெஞ்செனக்கு |

# உதவி போதகர் மடல்

## வாக்குத்தத்த செய்தி

### திரைக் கிழிந்தது

மரணத்தை ஜெயித்த நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். இந்த விசுவாசத்தில் வாழும் நமக்கு ஆண்டவர் கொடுக்கும் நம்பிக்கையின் வாக்குத்தத்தம்:
திரைச்சீலை கிழிந்தது. மத்தேயு 27:51b

தேவாலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தின் திரைச்சீலை, இயேசு கிறிஸ்து மரித்தபோது, இரண்டாகக் கிழிந்தது. ஏன் இப்படி நடந்ததென்றால், இரண்டு காரியங்களுக்காக நடந்தது. முதலாவது: ஜனங்கள் ஒரு குறிப்பிட்ட நிலைவரை மட்டுமே, அதாவது பரிசுத்தஸ்தலமட்டுமே அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இயேசுகிறிஸ்து மகா பிரதான ஆசாரியனாக இந்தத் திரையின் வழியே பிரவேசித்தார் (எபி.9:12). மட்டுமல்ல, மனுஷனுக்கு மறைக்கப்பட்டிருந்த மகா பரிசுத்த ஸ்தலத்தின் உடன்படிக்கைப் பெட்டி, கிருபாசனம், வசனம், மன்னா, கேருபீன்கள், ஆரோனின் தளிர்ந்த கோல் ஆகியவைகள் இந்தத் திரை கிழிந்ததால் கண்கள் கண்டது.

நம்முடைய வாழ்விலும் ஆசீர்வாதங்களை மறைக்கும் எந்தத் திரையும், தேவனுடைய இரட்சிப்பையோ, தேவ பிரசன்னத்தையோ, அவருடைய வல்லமையுள்ள செயலையோ மறைக்கும் எந்த திரையும், இந்த மாதம், அவர் எனக்காக மரித்தார் என அறிக்கை செய்யும்போது கிழியும், கண்கள் காணும்.

**1. வாக்கை மறைக்கும் திரை (ஆதி.37:19,20):**
தேவன் நம் வாழ்வில் நிறைவேற்ற நினைக்கும் கிரியைகளை, ஆசீர்வாத நிலைகளை, உயர்வுகளை மறைக்கும் திரைகள் உண்டு. யோசேப்பின் வாழ்வில் இதைக் காண்கிறோம். கர்த்தர், சொப்பனம் மூலம், அவன் வாழ்வில் நிறைவேற்றவிருக்கும் உயர்வை வெளிப்படுத்தினார். ஆனால் மனுஷனுடைய சதி ஆலோசனை என்னும் திரை, “எப்படி நிறைவேறும் பார்ப்போம்?” என சொல்லி மறைத்தது யோசேப்பை. இது அவனைத் தனிமைப்படுத்தி, குழி, எகிப்து, சிறை என பல இன்னல்களைச் சந்திக்கச் செய்தது. ஆனால் தீமையின் திரையைக் கிழித்து (ஆதி. 50:20), தேவன் சொன்னதை யோசேப்பின் வாழ்வில் நிறைவேறப்பண்ணினதை அனுபவமாக யோசேப்பு தன் சகோதரரிடம் சொன்னான்.

### 2. வாழ்வை மறைக்கும் திரை (அப்.9:18):

தேவனுடைய இரட்சிப்பின் திட்டமாகிய, கிறிஸ்து இயேசு என்னும் மீட்பரை விசுவாசிக்கும்போது, கிடைக்கும் வாழ்வை மறைத்த திரையாகிய மீன்செதில்கள் பவுலுடைய கண்களில் இருந்தது. அப்போது பவுல், சகமனிதனைக் கசப்புடனும், வெறுப்புடனும் (9:1), சீறிப்போய் கட்டும்படியும், தீவிரப்படும் செயலைச் செய்யும்படி, அந்தத் திரை அவனை மாற்றிற்று. அவனுக்குள்ளும் அமைதியில்லாத நிலைமையையும், அவனைச் சுற்றியுள்ள மற்றவர்களின் அமைதியைக் கெடுக்கும் ஒரு வாழ்வை, இந்தத் திரை பவுலின் வாழ்வில் செய்தது. ஆனால் இயேசுகிறிஸ்து சந்திக்கும்போது (வ.6), ஒரு அர்ப்பணிப்பு வருகிறது(வ.18), மீன்செதிள்கள் என்னும் திரை கிழிந்து, பார்வை தெளிவானது (வ.22). அப்போது வாழ்வு தேவதிட்டத்தோடு இணைந்தது.

### 3. வழியை மறைக்கும் திரை (யாத்.14:21):

கானானின் ஆசீர்வாதத்துக்குக் கர்த்தரால் அழைத்துச் செல்லப்பட்ட வழியை கடல் மறைத்தது. என்ன செய்வதென்று அறியாமல் ஜனங்கள் திகைத்துப் போனார்கள். பின்னால் பார்வோனின் இரதங்களும் நெருக்கிக் கொண்டிருக்கிறது. அப்போது தேவன் மோசேயை நோக்கி: "உன் கோலை நீட்டி சமுத்திரத்தைப் பிளந்துவிடு" என்றார். அன்று அந்த கோலில் கர்த்தருடைய வல்லமை விளங்கியது. இன்று நம்முடைய வாயால் செய்யும் அறிக்கை ஜெபத்தில், நம்முடைய ஆசீர்வாத வழியை அடைக்கும் எந்த திரையையும் கிழிக்கும் வல்லமை, கிறிஸ்துவின் மரணத்தை விசுவாசித்து, அவருடைய நாமத்தை அறிக்கை செய்யும் நமக்கு நிச்சயமாக வெளிப்பட்டு, நம்முடைய வழியை மறைக்கும் எந்த திரையையும் கிழிக்கும், வழியை உண்டாக்கும். ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

## வாழ்த்துகிறோம்

கர்த்தருடைய கிருபையால் ஜனவரி மாதம் 3-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mrs.Caroline & Mr.Ryan
கர்த்தருடைய கிருபையால் ஜனவரி மாதம் 16-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.G.Alwyn John Peter & Mrs.Lydia Rajathi
இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# உதவி போதகர் மடல்

"வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கும்", இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் உங்களை அன்புடன் வாழ்த்துவதில் மிக்க மகிழ்கிறேன்.

புதிய வருடத்தின் முதல் மாதத்தினை நிறைவுசெய்ய கர்த்தர் துணைபுரிந்தார். பிப்ரவரி மாதத்திலும் துதியுடனும், பாடலுடனும், இறைவேண்டலுடனும், திருமறை தியானத்துடனும், திருச்சபை ஆராதனையோடும் முன்னோக்கிப் பயணிக்க கர்த்தர் உதவிசெய்வார்.

இம்மாதத்தில் திருவசனத்தைப் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.
திருமறைப்பகுதி: சங்கீதம் 139. தியானவசனம்: சங்கீதம் 139:1

"கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்"
"O Lord, you have searched me and you know me"

கர்த்தர் அனைவர் மேலும் கரிசனையுள்ளவர் என்ற உறுதியான நம்பிக்கை மனுக்குலத்திற்கு மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் அருளுகிறது. சங்கீதம் 139 ஆழமான தனிமனித உணர்வுகளைக் காட்டும் சங்கீதமாகும். இது சங்கீதங்களுக்கெல்லாம் மகுடமாக விளங்குகிறது. இச்சங்கீதம் வாசிக்கும்பொழுது, கர்த்தர் நம்மை ஒருபோதும் கைவிடுபவர் அல்ல என்பது தெளிவாகும்.

இச்சங்கீதம் வெளிப்படுத்தும் மூன்று முக்கிய கருத்துக்களைத் தியானிப்போம்.

1. கர்த்தர் எல்லாம் அறிபவர் (சங்கீதம் 139:1-6, 13-18)
வசனம் 2, என் உட்காருதலையும், என் எழுந்திருக்குதலையும் அறிந்திருக்கிறீர், என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர் (You know when I sit and when I rise, you perceive my thoughts from afar).

நம்முடைய சிந்தனைகள் நம்முடைய மனதிற்குள் வருவதற்கு முன்னரே ஆண்டவர் அவற்றை அறிந்திருக்கிறார். நம்முடைய மனதைப்பற்றி நாம் அறிந்திருப்பதைவிட அதிக நுட்பமாக ஆண்டவர் அறிந்திருக்கிறார். இது ஆறுதலான ஒரு காரியமாகும்.

பேதுருவினிடத்தில் மூன்றாம் முறையாக "நீ என்னை நேசிக்கிறாயா?" என்று அவர் கேட்டபோது, அவன், "ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்" என்றான். (யோவான் 21:17). கர்த்தர் நமது தெரிந்தெடுப்புகளையும், பழக்கவழக்கங்களையும் அறிந்திருக்கிறார். நமது விருப்பங்களையும், வார்த்தைகளையும் அறிந்திருக்கிறார் (வசனம் 4). நமது விருப்பங்களை, வார்த்தைகளை, நமது கடந்த-நிகழ், எதிர்காலங்களை, நமது உடல்,

உள்ளம், உணர்ச்சி, சித்தம் (வசனம் 4,5,13-15) கர்த்தர் நமது வாழ்வை மிக நெருக்கமாக அறிந்து வைத்திருக்கின்றார். இது நமக்கு மிக வியப்பாகவே காணப்படுகிறது. கர்த்தர் நம்மை அறிபவர் என்கிற மகிழ்ச்சியில், சான்றுடன் வாழ்வோம்.

**2. கர்த்தர் எல்லா இடமும் இருப்பவர் (சங்கீதம் 139:7-12):**
வசனம் 8, நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர், நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். "If I go upto the heavens, you are there; If I make my bed in the depths you are there." கர்த்தர் நம்மை அதிகமாக நேசிப்பதால் நாம் தம்மை விட்டுச்செல்ல ஒருபோதும் விடமாட்டார். நாம் அவரைப் பிடித்து இருக்கும் பிடியை விட்டுவிட்டாலும்கூட, அவர் நம்மைப் பற்றியிருக்கும் தமது பிடியை விடுவதேயில்லை என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். நாம் ஒருவேளை அவருக்குப் புறமுதுகு காட்டலாம். ஆனாலும் அவர் நம்மைவிட்டுப் போவதில்லை. நம்மைத் தொடர்ந்து பிடிக்கும் அவரது அன்பிலிருந்து நாம் தப்பவே முடியாது. "நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர், நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்."(வசனம் 8).

நாம் ஆராதிக்கும் கர்த்தர் எல்லா இடமும் இருப்பவர். நம்மைக் காண்கின்ற கர்த்தர். வனாந்திரத்தில் ஆகாரின் கண்ணீரைக் கண்டு தேவையை நிறைவேற்றியது போன்று நாம் இருக்கும் இடத்தில் நம்முடன் இருந்து ஆசீர்வதிப்பார்.

**3. கர்த்தர் எல்லோரையும் தூய்மைப்படுத்துபவர் (சங்கீதம் 139:19-24)**
மனித வாழ்வில் வெளிப்புறத்தூய்மை, உள்ளான தூய்மை மிக அவசியம் (வசனம் 19,20,23,24) நம்மைச் சூழ்ந்திருக்கும் தீமையை உணரும்போது, உள்ளத்திற்குள் இருக்கும் தீமையையும் காணமுடியும். "தேவனே என்னை ஆராய்ந்து என்னை அறிந்துகொள்ளும்... வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்" (சங்கீதம் 139:23,24) என்று சங்கீதக்காரன் ஜெபித்தார். வேதனை உண்டாக்கும் வழிகள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டு மாற்றப்படவேண்டும். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைத் தூய்மைப்படுத்த ஆற்றலுள்ளது.

புதிய மாதமாகிய பிப்ரவரி மாதத்திலும், வாழ்வின் தொடர் பயணத்திலும், கர்த்தர் எல்லாம் அறிபவராக, எல்லா இடமும் இருப்பவராக, தினமும் நமது வாழ்வைத் தூய்மைப்படுத்தி நித்திய வழியிலே நடத்துவார். இம்மட்டும் நம்மை வழிநடத்திய கர்த்தரை உறுதியாகப் பின்பற்றுவோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துின் இனிதான நாமத்தில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சிடைகிறேன். சென்ற மாதம் முழுவதும் நம்மைப் பாதுகாத்த கர்த்தர் இந்த மாதமும் நம்மைப் பத்திரமாக பாதுகாப்பார்.

## யோகெபேத்தின் விசுவாச வாழ்வு

திருமறைப்பாடம் : யாத்தி. 2:1-11 மைய வசனம் : யாத்தி. 2:9b

"அந்த ஸ்திரீ பிள்ளையை எடுத்துக்கொண்டு போய் வளர்த்தாள்"

கானான் தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டபோது யோசேப்பினால் எகிப்துக்கு கொண்டுவரப்பட்ட யாக்கோபின் குடும்பத்தாரில் லேவியும் ஒருவன். இந்த லேவிக்குப் பிறந்த மகள்தான் யோகெபேத். யோகெபேத் மோசேயின் தாய் (யாத்.6:20). யோகெபேத் என்றால் "கர்த்தர் மகிமையானவர்" என்பது பொருள். பிறக்கின்ற குழந்தைகளை நைல் நதியில் போடவேண்டும் என எகிப்து அரசர் சட்டம் பிறப்பித்தபோது பிறந்த பிள்ளைதான் மோசே. இந்தச் சூழலில் எப்படிப் பிள்ளையைக் கர்த்தரில் விசுவாசம் வைத்து வளர்த்துகின்றாள் என்பதைத் தியானிப்போம்.

### 1. பயத்தைப் புறம்பாக்கிய விசுவாசம் (யாத்.2:2)

யோகெபேத் மோசே பிறந்தபோது அவனை மூன்றுமாதம் ஒளித்து வைத்தாள். கர்த்தர்பேரில் யோகெபேத்-அம்ராம் தம்பதியினர் வைத்த விசுவாசம் பயத்தைப் புறம்பாக்கினது. "பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்" (1 யோவான் 4:18). அவர்கள் தங்கள் குழந்தையின் மேல்வைத்த அன்புதானே காரணம். விசுவாசமும் அன்பும் இணைந்து செயலாற்றுகிறது. பிள்ளை அழகுள்ளதென்று கண்டு ஒளித்து வைக்கப்படுகிறது. ஸ்தேவான், மோசே திவ்விய சவுந்தரியமுள்ளவனாய் இருந்தார் (அப்.7:20) என கூறுகின்றார். கர்த்தரில் சார்ந்து பிள்ளையைப் பார்த்ததால் அழகு பிள்ளையின் முகத்தில் தெரிந்தது. இறைவனுக்குப் பயந்து எதைச் செய்தாலும் கர்த்தர் நமக்குத் துணைநிற்பார். நீதி.14:16-ம் வசனத்தில் கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்கு திடநம்பிக்கை உண்டு.

2. பிரச்சனையை எதிர்கொள்ளும் விசுவாசம் (யாத்.2:3):

யோகெபேத் இனி பிள்ளையை ஒளித்து வைத்து வளர்க்கமுடியாது என்ற சூழலில் ஒரு நாணல் பெட்டியில் பிசினும் கீலும் பூசி அதிலே பிள்ளையைக் கிடத்தி நதியில் விடுகின்றாள். இப்படிப்பட்ட யோசனையை கர்த்தர் ஏற்றவேளையில் கொடுத்தார். அவள் தேவசமூகத்தில் இருந்து முற்பிதாக்களின் சரிதைகளைப் படிக்கும் போது கிடைத்த யோசனையாக இருந்திருக்கலாம்.

அன்று நோவாவின் காலத்தில் கர்த்தர் தேசத்தை அழிக்கும்போது “கொப்பேர்” மரத்தில் பேழை செய்து உட்புறமும், வெளிப்புறமும் கீல் பூசக்கூறினார். பேழை ஜலப்பிரளயத்திலிருந்து காக்கப்பட்டது போல தன் பிள்ளையை நாணற்பெட்டியில் வைத்து நதியில் பிள்ளையைக் காப்பார் என நம்பினாள். நமது வழிகளில் அவரை நினைக்கும்போது நமது பாதைகளை செவ்வைப்பண்ண கர்த்தர் வல்லவராயிருக்கிறார். நீதி. 3:6 பிரச்சனைகள் வரும் வேளையில் மனம் சோர்ந்து போகாது கர்த்தரைப் பார்ப்போம். பிரச்சனையில் இருந்து விடுபட புதிய வழிகளைக் காண்பிக்க கர்த்தர் வல்லவராய் இருக்கிறார்.

3. தொடரும் விசுவாசம் (யாத்.2:4)

யோகெபேத் பிள்ளையை நதியில் விட்டபின் என்ன சம்பவிக்கிறது என்பதைக் கவனிக்க தன் மகள் மிரியாமை அனுப்புகின்றாள். பார்வோன் குமாரத்தி குழந்தையின்மேல் இரக்கமுற்று குழந்தையை வளர்க்க முற்படுகின்ற வேளையில் மிரியாம் வழியாக மீண்டும் குழந்தையை வளர்க்கும் பாக்கியத்தைப் பெறுகிறாள். தம்மை விசுவாசிக்கும் அனைவருக்கும் அடைக்கலம் கொடுப்பவர் கர்த்தர் என்பதை நாம் மறந்துபோகக்கூடாது. கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு. அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும் (நீதி.14:26) என்ற வசனத்தின்படி குறிப்பிட்ட காலம் வரை தொடர்ந்து பிள்ளையை வளர்க்கும் கிருபையை கர்த்தர் கொடுத்தார். மோசே இஸ்ரவேல் ஜனங்களை மீட்கும் தலைவராக கர்த்தர் தெரிந்தெடுத்தார்.

அன்பானவர்களே, நாம் கர்த்தரிடத்தில் எல்லாச் சூழலிலும் விசுவாசம் வைத்து வாழும்போது கர்த்தர் நம்மை மேன்மைப்படுத்துவார். இந்தப் புதிய மாதத்தில் நமக்குத் தேவையான நன்மைகளை ஆண்டவர் அருளுவாராக.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி J.விஜிலா ராணி
உதவி போதகரம்மா.

# செயலர் மடல்

சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் இவ்வாண்டை அவருடைய சந்நிதானத்தில் துவங்கச்செய்த நம் தேவாதி தேவனுக்கு துதிகளையும் கனத்தையும் மகிமையையும் செலுத்துகிறேன். புதிய திட்டங்களோடும் இலக்கோடும் துவங்கிய இவ்வருடத்தை வெற்றியோடும் ஜெயத்தோடும் அவருடைய சித்தத்தின்படி முடிக்க கிருபைச்செய்வார் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

வெளியூர்களுக்குச் சென்று மகிழ்ச்சியோடு இப்பண்டிகைக் காலங்களை முடித்து திரும்பிவந்த அனைத்து திருச்சபை அங்கத்தினர்களுக்கும் என் வாழ்த்துக்கள். ஜனவரி 11-ஆம் தேதி அன்று நம் திருச்சபையின் சிறுவர் பாடசாலை ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அதில் வேதபாட பரீட்சை மற்றும் வேதமனன வசனப்போட்டியில் தேர்ச்சிப்பெற்ற அனைத்து பிள்ளைகளுக்கும் பரிசு வழங்கி உற்சாகப்படுத்தப்பட்டது. சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்திய அவர்களுடைய பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன். அதன் பொறுப்பாளர் திருமதி. ஜெயந்தி சம்பத் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாதத்தில் நடைபெறவிருந்த சபைச்சுற்றுலா பெப்ரவரி மாதம் 8ஆம் தேதிக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

நமது கிளைச்சபையான புஜைரா திருச்சபையின் ஆராதனை ஸ்தலம் ஜனவரி 1ஆம் தேதி முதல் New Testament Church, Al Hayl வளாகத்தில் இடம் மாற்றம் செய்யப்பட்டது. அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்ற இடத்தில் ஆராதனை செய்வதற்கான எல்லா வசதிகளும் கொண்ட இடம் நமக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக நம் தேவாதி தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன். இதற்காக உழைத்த, ஜெபித்த அனைத்து திருச்சபையின் அங்கத்தினர்களுக்கும் விஷேசமாக புஜைரா திருச்சபையின் ஆயர் Rev. ஆல்வின் பிரைட் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ந்து நமது திருச்சபையின் ஊழியங்களுக்காகவும் விஷேசமாக நமது திருச்சபைக்கான இடம் வாங்கி அதைச் சீக்கிரமாக பதிவு செய்கிறதற்காகவும் உங்கள் ஜெபங்களில் ஜெபிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

Jernaus Britto, Secretary.

## Childrens Corner - January 2019

### Grade 3 - Grade 5

1. Efraiyn Rishon
2. Jessica Catherene Paul
3. Vanna
4. Hubert
5. Abigail Jose
6. Gladvin Joel
7. Jaymen
8. Jaymie
9. Jeshua Inbakumar
10. J. Ellen Shona
11. Bernice
12. Sanjay Sumesh
13. Trinita David
14. Lenofa Joy

### Grade 6 - Grade 8

1. Jeflin Victo
2. Freddy Manuel
3. Dany Solomon
4. Joel Sumesh
5. Hannah Liprens
6. Edliyn Rishona
7. Maisie Samson
8. Jennifer Sherene Paul
9. Jefflin Nayagam
10. Jeba Vincent Selvam
11. Thamin Joseph
12. Gracelin Esther Suresh
13. Irene Russal
14. J. Kelvin
15. J. Kezita
16. Driessen Samuel

### Grade 9 and above

1. Pearlwin Reginald
2. Jerusha .R
3. Ethan David Sathish Paul
4. Nickolyn Nixon
5. Riches Paul
6. Jeyanth Inbakumar
7. Shauna Kathy Jazlyn
8. Gerald Moses

## திருமறைப் பாட ஒழுங்குகள் - பிப்ரவரி 2019

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 01-02-2019 | வழிபாடு | ஆதியா. 12:1-8 | வெளிப். 5:6-10 | யோவான் 2:13-22 | 84 |
| 08-02-2019 | வியாதியிலிருந்து சுகம் | 2 இராஜா. 20:1-7 | 2 கொரிந். 12:1-10 | யோவான் 9:1-7 | 103:1-10 |
| 15-02-2019 | ஒன்றையொன்று சார்ந்துள்ள படைப்புகள் | ஆதியா. 2:1-15 | கொலோ. 2:16-23 | மத்தேயு 13:1-9 | 104:24-35 |
| 22-02-2019 | படைப்புகளின் சீர்கேடு | ஏசாயா 5:1-12 | கலாத்தியர் 1:6-10 | லூக்கா 10:13-20 | 8 |

# JUNIOR CHURCH ANNUAL REPORT 2018

"Train up a child in the way he should go;
and when he is old, he will not depart from it". Proverbs 22:6

Let me begin this report by thanking the almighty for all the blessings that He had showered upon our Junior Church children, teachers and volunteers during the year, 2018.

We had approximately 295, children registered last year although our weekly numbers fluctuated. We have 38 dedicated teachers and 6 volunteers on regular basis, who served in the Junior Church unconditionally .

Junior Church classes were held on all Fridays from 9 a.m. to 10.30 a.m. We begin our sessions with singing, thanksgiving, intercessory prayers, missionary talk and celebrating birthdays! The children and teachers continue to support the missionary in Kavalur and continue to give special offertory every month and pray for this ministry. The remaining time was used for Bible lessons.

The Praise and Worship was conducted in both the sides of the halls, one side from Pre-kg to Grade 4, was conducted by Sarah Mohan with her vibrant talent in singing and making the small kids sing melodiously. On the other side of the hall from Grade 5 to Grade 12 was conducted by Mrs. Nisha Jason, Mr. Jeberson and Jehosh, by praising and thanking God in a holy and vibrant way.

We are very proud to say that we followed our own theme based syllabus, in 2018, which was written, printed and published by our teachers and expertise with the help of Mrs. Priya Singh and our committee. It was divided into four themes, from pre-kg to Gr. 2 - Values in God's family, Gr. 3 to Gr. 5 - Relationship in God's Family, Gr. 6 to Gr.8 - Oneness in God's family and from Gr. 9 to Gr. 12 - Responsibility in God's family. All these lessons were Bible based with real life application.

Counseling session for board class students was conducted by our church member Mr. David, It was a great help for the Grade 10 and 12 children and thanks to him for his involvement .

The VBS Director was Miss. Mary Ganamuthu, who conducted it with the help of Scripture Union. Many children from other denominations participated.

Our regular markers, which included, Junior church service, Retreat, Summer Camp, Memory Verse contest, the annual JC stall during the Harvest Festival, Assessments, Junior Choir and the Christmas tree programme was conducted in a befitting manner and brought glory to His name.

During the year, we gave all the teachers independent hands to freely participate and organize all the programmes single handed or in groups. Every Month, teachers Chain prayer is dedicatedly conducted and every month teachers' prayer meeting is held to pray for our junior church children and to help us do our duty well.

During the summer vacation we had the summer camp, the years summer camp Director was Mrs. Sheeba Reginold, who conducted it very well. Ladeger maintenance, collection of money for programmes and birthdays are very promptly done by Mrs. Latha Rajan.

This year, Mrs. Shermil, Mr. Vigil, Mrs. Zanet, Mrs. Sathiya Vinodh, and Mrs. Leona Manoj joined our Junior Church family. May God bless them for their involvement in the children ministry.

Our team of volunteers, Mr. Kissinger, Mr. Wesley, Mr Das Prabhakar, Mr. Bosco, Mr. Samnath and Mrs. Priyadharshni are always there to help us every week. Special thanks to Mr. Subhash Paul for organizing food every week for our JC Kids.

I want to thank our Reverend Victor Premkumar for his constant support and right guidance for the Junior Church and our lay preacher, Mr. Simon for his timely advice, the committee for their support, encouragement, dedication and willingness to enrich our children's Righteousness in Christ. I thank God for all our well-wishes for their prayer support towards this glorious ministry and the wonderful parents who untiringly support their children by bringing them to the junior church and during all its activities.

I would finish this report with a truly heartfelt thanks to the wonderful teachers and volunteers who give their time, talents and love every week to the youngsters in our church. I continue to be amazed, awed and humbled by the dedication, enthusiasm and love each teacher brings every Friday……. You all do it so very well! Thank you very much! May God Bless you all.

Above all I thank God for all His blessings and mercies on this ministry and pray that His abounding mercies may continue in the years to come on all our kids.

In Christ Service
Jayanthi Sampath
(JC Superintendent)

# தெரிந்த சத்தியம்! தெரியாத உண்மை!!!

**மோசே**

சிப்போராளையும் தன்னுடைய குமாரரையும் மீதியான் தேசத்திற்கே திருப்பி அனுப்பிய பின்பு, மோசேயும் ஆரோனும் எகிப்திற்குச் சென்று இஸ்ரவேலரிடம் சென்று கர்த்தருடைய வார்த்தைகளை எடுத்துரைத்தனர். இதைக் கேட்ட இஸ்ரவேல் புத்திரர் மிகவும் களிகூர்ந்தனர்.

மறுநாள் காலமே எழுந்து, மோசேயும் ஆரோனும் தங்கள் கையில் கர்த்தருடைய கோலுடன் பார்வோனது அரண்மனைக்குச் சென்றனர். பார்வோனது அரண்மனைக்குள் யாரும் நுழையாதபடிக்கு, இரண்டு இளஞ்சிங்கங்கள் இரும்பினால் கட்டி வைக்கப்பட்டிருக்கும். ஒருவர் பார்வோனது கட்டளை பெற்றபின்னர் அந்த சிங்கங்களைக் கட்டி வைத்திருப்பவர்கள் வந்து, அவர்களைச் சிங்கங்களிடம் சிக்கிக் கொள்ளாதபடிக்கு பார்வோனிடம் செல்ல அனுமதிப்பது வழக்கம். ஆனால் மோசேயும் ஆரோனும் பார்வோனது அரண்மனைக்குச் சென்றபோது, மோசே துரிதமாக தன்னுடைய தன் கையிலிருந்த கோலை உயர்த்தினார். உடனே அவைகள் கட்டுகள் கழன்றது. மோசேயும் ஆரோனும் பார்வோனது அரண்மனைக்குள் சென்றனர். அந்தச் சிங்கக்குட்டிகளும் மிகவும் மகிழ்ச்சியுடன் வேலைக்குச் சென்றுத் திரும்பும் எஜமானனை வரவேற்பது போன்று துள்ளிக் குதித்து பின் சென்றது. இதனைக் கண்ட பார்வோன் மிகவும் அதிர்ந்து போனான். அதுமட்டுமல்லாமல் அவர்களது தோற்றத்தைப் பார்த்தபோது அவர்கள் தேவனுடைய பிள்ளைகளைப் போன்று காணப்பட்டார்கள்.

பார்வோன் மோசேயைப் பார்த்து, “உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று வினவினான். அவர்கள் பார்வோனை நோக்கி, “எபிரெயரது கடவுள் எங்களை தங்களிடம் அனுப்பி, தன்னுடைய மக்கள் தன்னைச் சேவிக்க அனுப்பிவிட வேண்டும் என்றுச் சொல்லச் சொன்னார்” என்றனர். அவர்களது வார்த்தைகளைக் கேட்ட பார்வோன் மிகவும் பயந்து, “நீங்கள் இன்றைக்குச் சென்றுவிட்டு நாளைக்கு வாருங்கள்” என்றான். எனவே மோசேயும் ஆரோனும் பார்வோனது அரண்மனையை விட்டு வெளியேறினர். அவர்கள் வெளியேறியவுடன் பார்வோன் பாலாம் என்னும்

தன்னுடைய மந்திரவாதியையும், அவனது பிள்ளைகளான யந்நேயும் யம்பிரேயையும், மற்றும் தனது அரண்மனையிலுள்ள அனைத்து மந்திரவாதிகளையும் அழைப்பித்தான். பார்வோன் அவர்களிடத்தில் மோசேயும் ஆரானும் கூறியவற்றை எடுத்துரைத்தான். அவர்கள் பார்வோனை நோக்கி வாசலண்டையில் நிற்கும் சிங்கக்குட்டிகளைத் தாண்டி அவர்கள் எப்படி வந்தனர் என்று வினவினர்.

பார்வோன் அவர்களை நோக்கி, அவர்கள் தங்கள் கோலை நீட்டியவுடன் அவைகளது கட்டுகள் நீங்கி, மிகவும் சந்தோஷமாக ஒரு நாய்குட்டியைப் போன்று என்னிடமாய் வந்தது என்றான். அதற்கு மந்திரவாதியான பாலாம் பார்வோனை நோக்கி, இவர்கள் எங்களைப் போன்ற மந்திரவாதிகளேயல்லாமல் வேறல்ல. எனவே அவர்களை மறுபடியும் அழைப்பியும். நாங்கள் அவர்களை சோதிக்கிறோம் என்றான்.

மறுநாள் காலையில் பார்வோன் மோசேயையும், ஆரோனையும் அழைப்பித்தான். அவர்கள் வந்து எபிரெயரது கடவுள் எங்களைத் தங்களிடத்தில் அனுப்பி, தன்னைச் சேவிக்க தன்னுடைய மக்களை அனுப்பிவிடும்படி கூறினார் என்றனர். பார்வோன் அவர்களை நோக்கி, நீங்கள் தேவனுடைய தூதுவர்கள் என்பதையும், நீங்கள் அவருடைய கட்டளைப்படிதான் என்னிடமாய் வந்தீர்கள் என்பதையும் நான் எப்படி நம்புவது என்றான்.

அப்பொழுதுதான் நாம் தெரிந்திருக்கிற அற்புதங்களான கோல் சர்ப்பமாக மாறியது..... போன்ற சம்பவங்கள் நடைபெற்றது.

தொடரும்...

நன்றி: யாசேரின் புத்தகம்.

தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## வருந்துகிறோம்

**"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"**

நமது சபையைச் சேர்ந்த
Mrs.Jerin Kanagaraj அவர்களின் தகப்பனார்
Mr.Antony Muthu அவர்கள் கடந்த 17-01-2019 அன்று
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# உபவாசம் இயேசு விசுவாசம்

யோவானின் நேரம்
யோர்தானின் ஓரம்
பாவத்தின் தீர்வாம்
ஞானஸ் நானம்

நற்செய்தி கூறும்
யோவானின் பாடம்
பெற்றபின் சுற்றம்
சூழமக்கள் திரளாம்

நீராடும் நீரோடும்
பெத்தபாரா ஊர்ஓரம்
ஊரோடும் உறவோடும்
யூதேயா எருசலேமும்

இருகரை ஒருநதி
இருபுற அலைமோதி
ஒருதிசை நோக்கி
நுரைதிரை யாகி

பதினெட்டு ஆண்டு
பக்குவத்தைக் கொண்டு
பதிவிட்டார் இயேசு
ஞானஸ்நானம் பெற்று

கலிலேயா விட்டு
யூதேயா தொட்டு
பலருடன் இயேசு
யோர்தானில் குளித்து

வெளியில் ஆனதும்
வான்வழி திறந்ததாம்
விளிகுரல் கேட்டதாம்
நேசகுமாரன் என்றதாம்

யோவானும் பேச
வான்காட்சி யாக
ஆவியானவர் புறாவாக
இயேசுமேல் இறங்க

நாற்பதுநாள் உபவாசம்
காட்டிலே மவுனம்
காப்பதுக்கோ மக்களாம்
நாட்டிலே நினைவாம்

இடறிவிடச் சாத்தான்
இடர்பட்டுப் போனான்
இடைபட்டுத் தூதன்
பணிவிடைாள் செய்தான்.

ஆதாரம் : நற்செய்திகள்
கவிதை எண் : 215.
கவி புனைவு : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். ரோமர் 2:7.

இயேசுவே... என்
ஆண்டவரே... என்
உடல் தூயதாகுக!
இயேசுவே... என்
இரட்சகரே... உமது
பக்தனாக... என்னை
உணர்வேனாக!
இயேசுவே...
பரிசுத்தரே... என்
மனம் தூயதாகுக!
இயேசுவே...
ஸ்துதிக்குப்
பாத்திரமானவரே...
நான்
அழுக்கும், பாவமும்
நீங்கியவனாகுக!
இயேசுவே...
உன்னதமானவரே...
என்
ஆத்மா தூயதாகுக!
அன்பானவர்களே...
ஜெபித்துப் பாருங்கள்.
ஜெபம் ஜெயம் தரும்.
என் தேவனால்
எல்லாம் கூடும்.
பழிக்கத்தக்க
செயல் எதுவோ..
அதை
தவிர்ப்பவரும்,
பழிக்கு அஞ்சி
வாழ்பவரும்,
பழிக்குப்பழி
வாங்கும் பாவம்
செய்யாதிருப்பவரும்,
பிறர் தீமையை
மன்னித்துவிடுபவரும்,
அன்புடன்
நேர்வழியிலும்
இயேசுவின்
அருளோடும்
வரும் பொருளில்
மட்டுமே...
திருப்தியடைபவரும்
உலக இன்பம்
மாயை... என
தெரிந்து...அதில்
மூழ்காமல்
முழுமனதுடன்
நற்செயல்களை
செய்பவரும்
பொறாமையை
விலக்கி
இதயத்தை
பரிசுத்தமாக்கி
இயேசுவை... அதில்
லயிக்கச் செய்பவரும்
எவரோ... அவரே
நற்கிரியைகளைச்
செய்தவராவார்.
இவருக்கு...
இடையில்
தடைகள் வரினும்
தளர்ந்துவிடாமலும்
சோர்ந்துபோகாமலும்,
என்பணி
இறைபணி
இயேசுவின்
அருள்பணி... என
ஆண்டவர்
நாமத்தினாலே
அமைதியாய்
செய்பவர்... தமக்கு
ஆயுள் முழுதும்
சுபம் வரும்.
பிரியமானவர்களே..
மகிமைக்கு
பாத்திரமானவரும்
பரிசுத்தமானவரும்
பாவம் போக்க
பாரினில் வந்தவரும்
பாடுகள் பட்டு
கல்வாரி சிலுவை
சுமந்தவரும்... நம்
இரட்சகருமாகிய
இயேசுவை...
கனம் பண்ணுவோம்
துதிப்போம். இவையே
பிறவியின்...பயன்...என
அறிந்து வாழ்பவர்
அழிந்தாலும்
அழியாபுகழ்
நிலைத்திருக்கும்...
அவர் நிரந்தரமானவர்.
சத்தியமானதும்
நித்தியமானதும்
பரம் ஒன்றே...
பரம்பொருள் ஒன்றே..
நித்திய ஜீவனை
கர்த்தர்... நமக்கு
அளிப்பார்.
வாக்குத்தத்தம்
தந்தவர்
வல்லவர் நல்லவர்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# திருச்சபை ஜெபநாள் 03-02-2019 (முதல் ஞாயிறு)

"தேவனே, என் ஜெபத்தைக் கேட்டருளும்;
என் விண்ணப்பத்திற்கு மறைந்திராதேயும்." சங்கீதம் 55:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- Junior Church Anniversary, Teachers Retreat யாவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக,
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
